# தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்பலர் கைது!

[சென்னை]
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களில் அனேகமானோர் சந்தேகத்தின் பேரில் தமிழக பொலிசாரினால் கைது செய்யப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 38 வைகாசி 18 துல்ஹஃதா 17 இதழ 110
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-06-1991

## வடக்கு கிழக்கில் சுமுகநிலை ஏற்படுத்த அரசு முயற்சி?

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் சுமுகமானதொரு நிலையேற்படுவதற்கான தக்க சூழ்நிலையொன்றை தோற்றுவிக்கும் துரித முயற்சியொன்று கொழும்பில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு
[4ம் பக்கம் பார்க்க]

## ஏருவூரில் தமிழ் மக்கள் ராணுவத்தால் விரட்டியடிப்பு

[மட்டக்களப்பு]
ஏருவூர் பகுதியில் பரம்பரையாக வாழ்ந்த தமிழ்மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டு வருகிறார்கள்.
உடைமைகள் அற்றநிலையில் அகதிகளாக வெளியேறும் இவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிவழங்க
(4-ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் தூதுவர் விவகாரம்: இல.- ஐரோப்பிய நாடுகளின் உறவைப் பெரிதும் பாதிக்கும்!

(லண்டன்)
இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாஸ்ரோனின் வெளியேற்ற உத்தரவு இலங்கை - பிரிட்டிஷ் உறவுகளை மாத்திரமல்லாமல் ஐரோப்பிய நாடுகளின் உறவுகளையு் பெரிதும் பாதிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

தேவேளையில் இலங்கை இந்த வெளியேற்ற நடவடிக்கையானது ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு வழங்கி வரும் பொருளாதார உதவிகளையும் பாதிக்கும் என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து திரு. கிளாஸ்ரோன் அதி அக்கறை எடுத்துக்கொண்டதன் விளைவாக அவர் இலங்கை அரசால் இவ்விதம் பாதிக்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்துத் தீவிர அக்கறை செலுத்தி வந்ததால் இந்த நடவடிக்கையையடுத்து அந்த நாடுகளும் கவலை அடைந்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு எதிராக பிரிட்டன் பதில் நடவடிக்கை?

(லண்டன்)
பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்ரோனை நாட்டை விட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு வற்புறுத்தியதையடுத்து இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான ராஜீய உறவுகள் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பிரித்தானிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
ஆயினும் பிரித்தானிய
[4ம் பக்கம் பார்க்க]

## தமிழக கடலோர பகுதியில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

(சென்னை)
தமிழக கடலோரப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இக்கடலோரப் பகுதிகளில் எல்லைப் பாதுகாப்பு படையினர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள கடலோரப் பகுதிகளிலுள்ள அனைத்து சோதனைநிலையங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எல்லைப்பாதுகாப்பு படையிடனர் தீவிர ரோந்துசெய்யவுள்ளார்கள்.

## பத்திரிகையாளரும் விசாரிக்கப்படுவர்

(கொழும்பு)
தமிழகத்திலுள்ளபத்திரிகையாளர் சிலர் ராஜீவ் காந்தி கொலைதொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுக்குழுவினரால் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

## மடுகோவில் அகதிகளுக்கு உணவுப் பொருட்கள்

[யாழ்ப்பாணம்]
க்கியநாடுகளுக்கான உயர் ானிகராலயத்தால் பரா கப்படும் மடுக்கோயில் திகள் முகாமுக்கு இன்று ிக்கிழமை காலை அனுராதபுரத்திலிருந்து 130 மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் 13 லொறிகளில் அனுப்பப்படுகிறது.
ஐ. நா. அகதிகளுக்கான
[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். சுகாதார அலுவலகம் நவீனமுறையில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)
பிராந்திய சுகாதார அலுவலகம், பிராந்திய மருத்துவக் களஞ்சியம், மார்புச் சிகிச்சை நிலையம் ஆகிய 3 பிரிவுகளும் மிக நவீனமுறையில் யாழ்.நக
(4-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதுவர் அடுத்தவாரம் நாடுதிரும்புவார்

[கொழும்பு]
இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாஸ்ரோன் அடுத்தவார முற்பகுதியில் பிரிட்டன் திரும்புவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.
இத்தகவலை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகப்
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் துன்புறுத்தல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் சுவர்களில் ஒட்டப்பட்ட போராளிகளின் சுவரொட்டி
(4-ம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)
உலர் உணவுநிவாரணத்தை தொடர்ந்து வழங்குவதென நேற்று யாழ். செயலகத்தில் அரசஅதிபர்திரு.கே.மாணிக்கவாசகர் தலைமையில் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
இதன் பிரகாரம் தற்போது ''இ'' கார்ட், உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 8-ம், 9-ம் கட்ட உணவு விநியோகம் முடிவடைந்ததும், 10-ம், 11-ம் கட்ட உணவு விநியோகம் ஆரம்பமாகும்.
தற்போது வழங்கப்பட்டு
(4ம் பக்கம் பார்க்க]

## பிரேமாவின் பலம் இவ்வாறு இருக்கிறதாம்

[கொழும்பு]
உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றி பெற்றதன் மூலம் ஜனாதிபதி திரு. பிரேமதாஸா பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியதொரு நிலைக்கு வந்துள்ளதாக 'லங்கா காடியன்' குறிப்பிட்டுள்ளது.
இதன்படி ஜனாதிபதி விடுதலைப்புலிகள், சர்வதேச மன்னிப்பு சபையின் விமர்சனம், புதிய இந்திய அரசு ஆகியவற்
(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சாதாரண)தர பரீட்சை விண்ணப்பங்கள் ஜூன் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படும்

[கொழும்பு]
க. பொ. த (சாதாரண) தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஜூன் மாதத்திலிருந்து ஏற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளைபரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்
(4ம் பக்கம் பார்க்க)

## இந்திய புலனாய்வுக் குழு இல. அதிகாரிகளுடன் ஆலோசனை

(கொழும்பு)
ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைநடத்த இலங்கை வந்துள்ள இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினர், இலங்கை புலனாய்வு மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தி வருகின்றனர்.
(4ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## துர்க்கா மங்கள சேவை

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால பலாபலன்களை அறிந்து செவ்வாய் பாவக் கிரகதோஷ நிவர்த்தி இலவச ஆலோசனை பெற்று சாந்தி வழிபாட்டுடன் திருமணம் நிறைவேற்றவும், அச்சொட்டாக சாதகம் எழுதவும், பலனை அறியவும். S B. தங்கராஜ், ''துர்க்கா மங்கள சேவை'', 115, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4784)

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், பேப்பர், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும் விற்கப்படும். சேனுதிராசா 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி 4755)

## நிலவே நீ மயங்காதே

தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண்மனம்களை இந்நாவலில் சந்தியுங்கள். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி-4788)

## தேவை

Computer Key Board அல்லது வேறு Computerகள் விற்பனைக்கு இருந்தால் உடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தூரதர்சன் தொழில் நுட்பகூடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன்சந்தி அருகாமை) (ஏ.1344)

## நீமியா உரம்

மிக்க சக்திகொண்ட அடிக்கட்டு உரமாக விளைச்சலைப் பெருக்கியும், நோய், பீடை பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு அளித்துக் கமக்காரருக்குக் கைகொடுக்கிறது. கிலோ ரூபா 10/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1339)

## இராசி பலன்

01-06-1991
சனிக்கிழமை

சதுர்த்தி பின்னிரவு 1-25 வரை, பூராடம் முற்பகல் 8-24 வரை. சித்தயோகம், இராகு காலம் காலை 8-52 முதல் 10-25, சுபநேரம் பகல் 2-52 முதல் 4-22 வரை.

மேடம்: கலையார்வம், தொழில்முன்னேற்றம். மறக்க முடியாத சந்திப்பு.

இடபம்: வாழ்வில் துயரம், நோய் உபாதை, தொழில் கஷ்டம்.

மிதுனம்: சகோதர முரண்பாடு, பிரயத்தனம், கடிதத் தொல்லை.

கடகம்: சுபகாரியச் செலவு, புத்திரர் மகிழ்ச்சி, வாக்கு வன்மை.

சிங்கம்: வருவாய்அதிகரிப்பு, மனையியல் அநுகூலம், பாராட்டு.

கன்னி; வீண்வம்பு. இனசன விரோதம், அதிகாரமேன்மை.

துலாம்: தடுமாற்றம், அதிகாரிகள் துன்பம், குடும்பப் பிரிவு.

விருச்சிகம்; வாயுக்கோளாறு, தொழில் நஷ்டம், குடும்ப மகிழ்ச்சி.

[4ம் பக்கம் பார்க்க]

---

# New Master Institute

B. M. C. Lane, Jaffna.

★ தூய, பிரயோக கணிதம் ★

**திரு. கிருஸ்ணு**

**91 A/L** தொகையீட்டின் பிரயோகம் 8-00 மணி
புவியீர்ப்பு மையம் 9-00 மணி

**92 A/L** நுண் கணிதம் 12-00 மணி
காவிகள் 1-00 மணி

ஆரம்பம்: 02-06-91 ஞாயிற்றுக்கிழமை

(ஏ-1337)

---

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சகங்ம்

# பதவி வெற்றிடம்

**கணக்காளர்:**

குறியீட்டு இல. 104/8

மேற்படி பதவி வெற்றிடத்திற்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

வசிப்பிடத் தகைமை: விண்ணப்பதாரி குறைந்தது 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

வயது: 25க்கும் 45க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்: 1005/ – 40 X 5 — 50 X 10 — 1705/- இத்துடன் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் ரூபா 760/– சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு தேதி: 14-06-91 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் தேவைப்படும் தராதரங்கள் தகைமைகள் பற்றிய விபரங்களைப் பெறுவதற்கு பொது முகாமையாளருடன் நேரடியாக அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பொது முகாமையாளர்.

(எ-1345)

---

உ

## 60-ம் நாள்

# நினைவஞ்சலி



**திருமதி பத்மநாதன் மதுரம்**

தோற்றம்: 20-01-1946 அழிப்பு: 03-04-1991

உன்னினைவு கூறிடும் அறுபதாம் நாளினிலே
உன்னுருவம் படமாக தோன்றிடுமிவ் வேளையிலே
எம்மவரிதயங்களில் அழியா விடம் பெற்ற - நீ
என்றென்றும் விட்டகலா இதய ஒளியாய்
தனியளுக தவித்திடும் என்னுயிர்க்கு - உன்
தயவுநாடி கண்ணீரால் கோலமிடு நேரமதில்
ஆவியாக கனவிடை காட்சிதரும் - உனக்கு
ஆருத் துயரத்துடன் நன்றி கூறுவதுடன் – உன்
ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வணங்குகின்றேன்.

திரு. மீனுட்சிசுந்தரம் பத்மநாதன் (கணவன்)
பிள்ளைகள்.


வாசிகசாலை வீதி,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

(சி-4785)

---

## நான்காவது ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி இரங்கநாதன்**

தோற்றம்: 14-09-1904 மறைவு: 01-06-1987

மகிழ்தலும் வெறுத்தலும் துன்புறுதலும்
அவாவுறுதலுமின்றி நன்மை தீமைகளைத்
துறந்த பக்தனே எனக்குப் பிரியமானவன்.

— ''பகவத் கீதை''

பிறவிக் கடலில் இருந்து ஓய்வு எடுத்து
பாற்கடலில் பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கநாதனின்
பாதங்களைப் பற்றிக் கொண்டு இருக்கும்
எங்கள் அன்புத் தந்தைக்கு எங்கள்
எண்ண அலைகளில் தெறிக்கும்
கண்ணீர் துளிகள் சமர்ப்பணம்.

உங்கள் நினைவால்

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

டச்சு றோட்,
தெல்லிப்பழை.

(சி-4790)

---

# தொழிற் பயிற்சிகள்

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**
சகல இன றேடியோக்கள், ரெலிவிஷன்கள், வீடியோ டெக்குகள் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.
காலம் —5 மாதம்

★ **Computer Programing BASIC, COBAL d Base III +, Word Processing LOTUS 1-2-3**
பயிற்சியளிக்கப்படுகின்றன.

★ **றீவைண்டிங்**
மின் மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர், மற்றய எலெக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம் — 4 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சார உபகரணங்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம் — 2 மாதம்

★ **AIR CONDITION & REFRIGERATION ENGINEERING**
சகல இன குளிர்சாதனங்கள் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்
காலம் — 4 மாதம்

★ **SPOKEN ENGLISH**
கல்வி பயில விரும்பும் மாணவர்களின் தகுதிக்கு ஏற்ப கற்பிக்கப்படும்.
காலம் — 2 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:

**06-06-1991 (கிழமை நாட்கள்)**
**08-06 1991 (சனி, ஞாயிறு)**

# JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
(ஏ-1343)



## எங்கள் புனிதர்

(இன்று பாஷையூர் புனித. அந்தோனியார் கொடியேற்றம்)

பாரெல்லாம் புகழ தெரு வெல்லாம் ஒலிக்க
புனிதா உன் புகழ் பாடுவேன்
புனிதா உன் புகழ் பாடுவேன்

அனுபல்லவி

பக்தர்கள் கோடி குறைதீர்க்கும் உந்தன்
திருநாமம் போற்றிடுவேன்
திரு நாமம் போற்றிடுவேன்

I

அந்தோனி எனும் நாமம் அடியோர்க்கு தஞ்சம்
அழுதோடி வந்தோர்க்கும் மஞ்சம்
தயை தேடி வந் தோர்க்கு வரம்தந்து காக்கும்
ஐயனின் புகழ் பாடவே

II

எந்நாளும் உம் புகழைத் தவறுமல் பாடும்
மைந்தர்கள் வந்தோம் உம் பாதம்
எந் நாளும் எம்மைத் தவறுமல் காக்கும்
தந்தையும் நீதானேயா.

— அருட்திரு சா. பி. கிருபானந்தன்.

# விடுதலை உணர்வைக் கூட்டும் தீமூட்டப்பட்ட யாழ். நூலகம்

## ஒரு தசாப்தம் நிறைவு

யாழ். பொதுசன நூலகம் இரவோடு இரவாக எரிக்கப்பட்டு, பத்து ஆண்டுகள் ஒரு தசாப்தம் நிறைவுபெற்று விட்டது. ஈழத் தமிழர்களுக்குக் கலங்கரை விளக்கமாக இருந்த பொதுசன நூலகத்தில் இருந்த லட்சக்கணக்கான விலைமதிக்கமுடியாத நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், ஓலைச் சுவடிகள், ஒலிப்பதிவு நாடாக்கள் போன்ற அத்தனையும், 1981ம் ஆண்டு ஜூன் திங்களில் சாம்பர் மேடாகக் காட்சி தந்தன. இதனை இலங்கை அரசின் பாதுகாப்புப் படையினர் தான் செய்தார்கள் என்பதை சன்சே னி கமிஷன் அறிக்கை தெளிவு படுத்தியது.

ஆசியாவில் தனிப் பெரும் நூலகம் எனப் பெருமைப் படக்கூடிய யாழ்ப்பாணப் பொது நூலகம், இன்று தமிழினத்தின் சோக வாழ்வை, விடுதலை உணர்வைப் புடம் போட்டுக் காட்சி தருகின்றது. அறிவாலயங்களும், அறிவாற்றல் நிரம்பிய பெரியோர்களது வரலாறும் என்றும் முற்றுப் பெறுவதில்லை என்பது பெரியோர் வாக்கு. தமிழர்களின் கல்வி விருட்ஷத்தை அழிப்பதன் மூலம், தமிழரை அடக்கி, ஒடுக்கி அடிமைப்படுத்தலாம் எனக் கனவு கண்ட சிங்களப் பேரின வாதிகளுக்கு, அவர்கள் செயலே ஒரு தசாப்தத்தாலும்

### துறவி

வெற்றிபெற முடியவில்லை என நூலக எரிப்புச் சான்று பகர்கின்றது.

யாழ்ப்பாண பொது நூலகம் அமைவதற்கு காற்கோள் அமைத்தவர் 1933ம் ஆண்டு நீதிமன்ற காரியதரிசியாக இருந்த க. மு. செல்லப்பா அவர்கள "A Central free Tamil Library in Jaffna'' என பரப்புரை செய்ததன் பயனாக, 1-8-1834ல் மின்சார நிலைய வீதியில் கடையொன்றை வாடகைக்கு எடுத்து வாசிகசாலை ஒன்றை ஆரம்பித்தார் இந்த வாசிக சாலையில் படிக்க இடமில்லாமல் நிலத்தில் இருந்து படித்த காலமும் இருந்தது. இதன் வளர்ச்சிதான், ஆசிய பவுண்டேசன், இந்திய தூதரகம், அமெரிக்க தூதரகம் ஆகியவற்றின் உதவியினாலும், பொதுமக்களின் நன்கொடையாலும் நரசிம்மனின் கட்டிடக் கலை நுட்பத்தாலும் யாழ்ப்பாணப் பொதுநூலகமாக நிமிர்து நின்றது.

இந் நூலகத்தை அமைக்க உதவியவர் நகரபிதா சாம் சபாபதி லோங் அடிகளார், பிரிட்டிஷ் தூதுவர் செசில் சையோர்ஸ், அமெரிக்க தூதுவர், பிலிப்குறேல், இந்திய தூதரக அதிகாரி சித்தாந்த சாரி ஆகியோர் எம்மிடமில்லை.

தமிழர்களின் அறிவு விருட்ஷத்தை வெட்ட கிளைகளின்றும் புதிய புதிய கிளைகள் தோன்றி விடுதலை என்ற விருட்சமாக வளர்ந்துவிட்டதை பொதுநூலக எரிப்பு நினைவூட்டுகிறது. (ச)

# அதிபர் தரம் II பரீட்சையில் சித்திபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபர்கள் தரம் II போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் இரண்டாவது பெயர்ப் பட்டியல், யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துள்ளது.

அவர்களின் பெயர், விபரம் வருமாறு: கே. சுவேந்திரநாதன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்), திருமதி எஸ். சோமலிங்கம் (நாமகள் வித்தியாசாலை, கொக்குவில்), திருமதி எஸ். சிவபாதசுந்தரம் (மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை), ரி. கந்தையா (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை), எம். பாலசுப்பிரமணியம் (மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை), ஏ. எம். அருணுசலம் (மானிப்பாய் மெமோறியல் பாடசாலை), எஸ். குபேரநாதன் (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), கே. கணேசலிங்கம் (சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை), எம். கணபதிப்பிள்ளை (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாசாலை), ரி. நவரத்தினம் (ஞான

(4ம் பக்கம் பார்க்க)

# உலகில் சிறந்த வீரர்களை உருவாக்கியவர் பிரபாகரன்

## கவிஞர் வாஞ்சிநாதன் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

''உலகில் தலைசிறந்த ஒழுக்கமும், கடமையுணர்வும், வீரமும் மிக்க போராளிகளை உருவாக்கியவர் தலைவர் பிரபாகரன்.''

இவ்வாறு அண்மையில் சரசாலைப் பகுதியில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

''நான் பத்து வருடங்களுக்கு முன் ஐரோப்பிய நாடொன்றில் இருந்தபோது, எனது அறையின் பக்கத்து அறையில் இரண்டு எதியோப்பிய இளைஞர்கள் இருந்தனர். ஓய்வான நேரங்களில் உலக அரசியல் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். எதியோப்பிய நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதே தமது இலட்சியம் என்று அவர்கள் அடிக்கடி கூறுவர்.

''எதியோப்பிய நாட்டின் விடுதலைக்காகப் போராடும் முக்கிய போராளிக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். ஆனல் அப் போராளிகள் மது அருந்தினர்; சிகரெட் புகைத்தனர்; கண்ட சண்ட பெண்களோடு சுற்றினர்; சூதாட்டங்களிலும் ஈடுபட்டனர். இன்று எதியோப்பியா, போராளிகளின் கையில் முழுமையாக வந்துவிட்டது. ஆனல் அந்தப் போராளிகள் மட்டுமல்ல. உலகின் எந்தப் போராளிகளுமே பூரணமான, ஒழுக்கத்துடன், கடமை கண்ணியத்துடன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. ஒவ்வொரு வரிடமும் சில பலவீனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் தமிழீழ விடுதலைப் புலிகளைப்போல். இன்று உலகின் தலைசிறந்த ஒழுக்கமும், கட

[4ம் பக்கம் பார்க்க]

## 'பரணிபாடுவோம்' வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் பரணி பாடுவோம்'' எனும் புதிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மாலை 4மணிக்கு இவ்விழா நடைபெறவுள்ளது. (வி)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

## மகாபொல கொடுப்பனவு 7-ம், 8-ம் தவணைப்பணம்

(வைகாசி, ஆனி 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்குக் கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

### இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 31-05-91 | 1-30—3-00 பி. ப. |
| கலைப்பிரிவு | 04-06-91 | 1-30—3-00 பி. ப. |
| வர்த்தகப்பிரிவு | 06-06-91 | 1-30—3-00 பி. ப. |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

### மூன்றும் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 03-06-91 | 9-00—12-00 மு. ப. |
| கலைப்பிரிவு | 05-06-91 | 9-00—12-00 மு. ப. |
| வர்த்தகப்பிரிவு | 07-06-91 | 9-00—12-00 மு. ப. |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

### நான்காம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 03-06-91 | 1-30—3-00 பி. ப. |
| கலைப் பிரிவு | 05-06-91 | 1-30—3-00 பி. ப. |
| வர்த்தகப் பிரிவு | 07-06-91 | 1-30—3-00 பி. ப. |
| வியாபார நிர்வாகப் பிரிவு | | |
| மருத்துவ பீடம்—5ம் வருடம் | | |

பதிவாளர்

(ஏ 1341)

## மகாபொல கொடுப்பனவு 7-வது தவணை

(வைகாசி 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

### முதலாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 31-05-91 | 9-00—12-00 மு. ப. |
| கலைப்பிரிவு | 04-06-91 | 9-00—12-00 மு. ப. |
| வர்த்தகப் பிரிவு | 06-06-91 | 9-00—12-00 மு. ப. |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |

(ஏ 1342)

பதிவாளர்


## கடற் புலிகளால் 3000 தொன்னுடைய 'அபித்தா'வே தகர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் பருத்தித்துறை கடலில் வைத்து அண்மையில் தகர்த்தெறியப்பட்ட கடற்படைக் கப்பல் மூவாயிரம் தொன் எடையுடைய ''அபித்தா'' (Abitha) என கடற்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

இக் கப்பல் முன்னர் சரக்குக் கப்பலாக இருந்தது. பின்னர் கடற்படையின் ரோந்து நடவடிக்கைக்காக கடற்படைக் கப்பலாக மாற்றம் செய்யப்பட்டது. இக் கப்பல் மே மாதம் நாலாம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில், மரணத்துக்கும் அஞ்சாத கடற் புலிகளால் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட படகு ஒன்றின் மூலம் சேதமாக்கப்பட்டதாகவும், இதில் ஐந்து கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் இருபது பேர் கடும் காயத்துக்குள்ளாகியதாகவும் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அடையாள அட்டையை தொலைத்தவர்கள் கிராமசேவையாளரிடம் முறைப்பாடு செய்யலாம்

[மானிப்பாய்]

யாழ். மாவட்டத்தில்தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் பொலிஸ் முறைப்பாட்டுக்குப் பதிலாக இனிமேல் கிராமசேவை அலுவலரிடமே முறைப்பாடு செய்தல் வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக யாழ், மாவட்ட அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், ஆட்பதிவுத் திணைக்களம் ஆகியவற்றுக்கு கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: யாழ். மாவட்டத்தில் தற்பொழுது பொலிஸ் நிர்வாகம் நடைமுறையில் இல்லாதிருப்பதால் ஒரு நபர் தனது அடையாள அட்டையைத் தொலைத்திருந்தால் தமது பகுதிக் கிராமசேவை அலுவலருக்கே முறையிட வேண்டும்.

இம்முறைப்பாட்டில் தொலைத்தவர் பெயர், விலாசம், எந்தச் சூழ்நிலையில் அடையாள அட்டை தொலைந்தது என்றவிபரத்துடன் தொலைந்த அடையாள அட்டையின் இலக்கம் தெரிந்திருந்தால் அதனையும் குறிப்பிட்டுத் தமது கையொப்பத்தையும் இட்டுக் கிராமசேவை அலுவலரிடம் கையளிக்கவேண்டும். கையொப்பமிடப்பட்டமுறைப்பாட்டை கட்டாயமாக கிராம சேவையாளர் பெற்று அதில் கிடைத்த திகதியை முத்திரையிட்டு பின் கையொப்பமிட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை கடந்த மாதம் 13ம் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு செல்லுபடியாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

# வடக்குகிழக்கு பகுதிகளுக்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு

[கொழும்பு]

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சேதமாக்கப்பட்ட கட்டடங்களை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கென 5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளையில் மட்டக்களப்பு வைத்தியசாலையை போதனை வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க)

# வங்கிசேவை முகாமையாளர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் ப. நோ. கூ.சங்கக் கிராமிய வங்கியில் பணக்கையாடலொன்று இடம்பெற்றதாக கடந்த 28-ம் திகதி இரவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு ஒரு முறைப்பாடு கிடைத்தது.

மறுநாள் 29ம்திகதிமக்கள் வங்கி அதிகாரிகள் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் முன்னிலையில் குறித்த கிராமிய வங்கியில் பரிசீலனைமேற்கொள்ளப்பட்டவேளையில் ரூபா 2,65,000/- அளவிலான நிதி கையாடப்பட்டமை கண்டறியப்பட்டது.

இவ்விடயங்களைத் தெரிவிக்க சங்கத்தின் நெறியாளர்கள், பொதுமுகாமையாளர், வங்கிச் சேவை முகாமையாளர் ஆகியோர் சங்கத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டனர். வங்கிச் சேவை முகாமையாளர் திரு. சிவலிங்கம் இத்தினத்தில் ஓய்வில் சென்றிருந்ததால் பொதுமுகாகையாளர் இவரை அழைத்துவர வாகனம் அனுப்பியபோது இவர் தான் சைக்கிளில் வருவதாகவும் லொறியைத் திருப்பிச் செல்லுமாறும் கூறியுள்ளார்.

பின்னர் வீட்டில் இவர் நஞ்சருந்தி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 30-மதிகதி அதிகாலை 5-30 மணிக்கு இவர் காலமாகியதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விசாரணை கூட்டுறவுத் திணைக்களத்தினதும், மக்கள் வங்கியினதும் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படுகிறது. மேல் விசாரணையின் போது இன்னும் பலர் விசாரிக்கப்பட்டு முழு உண்மைகளும் வெளிக்கொணரப்படுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தெரிவித்துக் கொள்ளுகிறது.

## இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: வஸ்திரலாபம், பெரியோர் உதவி, தொழில் சிறப்பு.

மகரம்; புதிய ஸ்தானம், பணியாள் உதவி, புதிய வாழ்க்கை.

கும்பம்: தொழில் போராட்டம், பகைவர் உறவு, வைத்தியச் செலவு.

மீனம்: வாழ்க்கை வசதி, தொழில் பிரச்சனை, தெய்வ வழிபாடு.

- ஜோஸ்யர்

## அதிபர் தரம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சூரியர் வித்தியாசாலை, கரவெட்டி), ரி. தவேந்திரராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஈ. செல்வராசா (காங்கேசன்துறை மகாவித்தியாலயம்), எஸ். ஞானலிங்கம் (மந்துவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), கே. சுந்தரலிங்கம் (தேவரையாளி இந்துக் கல்லூரி), திருமதி என். சிவசோதி (கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை), திருமதி ஈ. தனபாலசிங்கம் (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை).

ஏற்கனவே முதலாவது பட்டியலில் வந்த 117 அதிபர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [152]

## உலகின் சிறந்த

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மையும், வீரமும் மிக்க தியாகப் போராளிகளை உருவாக்கிய பெருமை, எமது தலைவர் பிரபாகரனையே சாரும். இந்தத் தலைவனைப் பெற்ற தமிழீழ மக்கள் பெருமைக்கு உரியவர்கள்'' என்ருர். (வி)

## மேஜர் செங்கதிர் ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மேஜர் செங்கதிர் ஞாபகார்த்த விளையாட்டுச் சுற்றுப்போட்டிகள் வடமராட்சியில் நடைபெறவுள்ளன.

அல்வாய் மனேகரா விளையாட்டரங்கில் முதலாவது சுற்றுப்போட்டியான 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கட்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இதில் 22 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. ஆரம்ப விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் கலந்து போட்டிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

## உலர் உணவு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வரும் விநியோகம், பல கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் முற்றுப்பெருததினுல் இம்மாதம் 5-ம் திகதிக்குப் பின்பு, புதிய விநியோகம் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கூடிய உணவுப்பொட்களை கையிருப்பில் வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் 10-ம் 11-ம் கட்ட உணவுவிநியோகம் ஒரே சமயத்தில் வழங்கப்படலாம் ஏன்றும் தெரிவிக்கப்படுகிறது.

''அ'', ''உ'' கார்ட்களுக்கு, கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதென்றும், மேற்படிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (வி]

## தமிழகத்திலுள்ள

[1ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ்காந்தி கொலைச் சம்பவத்தில் இலங்கை தமிழரும் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரிலேயேஇவர்கள் கைது செய்யப்படுவதாகவும் இவர்கள் தற்போது தீவிரமாக விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. [க]

## ஏருவூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்தபோதும் அவற்றுக்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

இதேவேளை வெளியேறும் அகதிகளுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எந்தவித பாதுகாப்பு வசதிகளையோ அல்லது உதவிகளையோ வழங்குவது இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. [க]

## வடக்கு-கிழக்கி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருகிறது.

இதன் ஒருகட்டமாகவே காங்கேசன்துறை துறைமுகம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு அரசு செஞ்சிலுவைச் சங்கத்தை கோரியுள்ளதாம்.

மேலும் ராஜீவ்காந்தியின் கொலை விசாரணை இலங்கைப் பிரச்சனை தீர்வை பாதிப்பை தவிர்ப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)

## க. பொ. த.

(1ம் பக்கத் தொட ச்சி)

திகதி ஜூன் மாதம் 30ம் திகதியாகும்.

பரீட்சைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்தார்.

புதிய பாடத்திட்டத்திற்கமையவே வினுத்தாள்கள் தயாரிக்கப்படவுள்ளதால் அதற்கு ஏற்றவிதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## மடுக்கோவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஸ்தானிகராலய வெளிநாட்டுப் பிரதிநிதிகளான டன்லோபவுத்திசா,கிறிஸ்ரீன் ஆகியோரின் பாதுகாப்பில் மேற்படி லொறிகள் வவுனியா தம்பனை பாதையின் ஊடாக மடுக்கோயிலை அடையவிருக்கின்றன. (153)

## பிரேமாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றின் நெருக்குதலுக்கு முகம் கொடுப்பாராம்.

மேலும் நிலைமையைப் பொறுத்தே அடுத்த நடவடிக்கை அமையுமென்றும்குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## இந்திய புலனுய்வு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முதற்கட்ட நடவடிக்கையாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுடன் தமது பேச்சுவார்த்தை அவர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இக்குழுவினர் தமது புலனுய்வு நடவடிக்கையைப் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளவுள்ளனர். [க]

## கடும் மழை

(கொழும்பு)

தென்பகுதியில் கடும்மழை பெய்துவருவதால் பல இடங்களில் பெரும் வெள்ளப் பெருக்கும், மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளது.

## இலங்கைக்கு எதிராக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவரை வெளியேறுமாறு இலங்கை வற்புறுத்தியதனைப் போன்று பிரிட்டனிலுள்ள இலங்கைத்தூதுவர் பிரித்தானிய அரசால் திருப்பியனுப்பப்படமாட்டார் எனவும் ஆயினும் இலங்கைக்கு தகுந்த பதிலடி கொடுக்க பிரித்தானிய அரசு ஆலோசித்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுளளன.

டேவிட் கிளாஸ்ரோன் வெளியேற்றம் தொடர்பாக அவர் இலங்கை அரசுக்கு எதிராக எந்த ஒரு கருத்தையோ அல்லது அறிக்கையையோ வெளியிட விரும்பவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [க]

## யாழ் சுகாதார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் பண்ணையில் இயங்கிவந்த மார்பு சிகிச்சை நிலையம் விமானக் குண்டுவீச்சினுல் தற்போது முற்ருக சேதபடைந்துவிட்டது.

இப்பகுதியிலேயே மேற்படி 3 கட்டிட வேலைகளும் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

பல கோடி ரூபா செலவில் மிக நவீனமுறையில் கட்டப்படவிருக்கும் இக்கட்டடங்களை நிர்மாணிக்கும் பொறுப்பை, நிர்மாண திணைக்களம்பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. (வி)

## பிரிட்டன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் ஒருவர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டபின் தெரிவித்தார்.

புதிய தூதுவர் பற்றிய விபரங்கள் எதுவும் உடனடியாக வெயிடப்படவில்லை. (சி]

## ஆயுதக் கிடங்கு வெடித்தது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பாரிய ஆயுதக்கிடங்கில் பெரும்வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.இதில் பலர் உயிரிழந்திருக்கலாம்.

இவ்வெடிவிபத்தினுல் ரொக்கட்டுக்கள் சிதறி வெடித்ததாகவும், பெருமளவு மக்கள் அச்சத்தினுல் வெளியேறிக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்திற்கான காரணம் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை. (க)

## மூவர் பலி

(வவுனியா)

வவுனியா நகருக்குள் உணவுப் பொருட்கள் வாங்கச் சென்ற தமிழ்ப் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்குள்ளாகினர்

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3ம் திகதிஆரம்பமாகவிருந்த கூட்டுறவு தராதரப்பத்திர உயர்பிரிவுக் கற்கைநெறி தவிர்க்கமுடியாத காரணங்களால் இம்மாதம் 12ம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கானகடிதங்கள்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## இராணுவம்

[1-ம் பக்கத்தொடர்ர்ச்சி]

களை இராணுவத்தினர் கிழித்து எரிக்கப்பட்டு நீருக்கப்பட்டு அவ்வழியால் போகும்போது மக்களுக்கு திருநீருகப் பூசும்படி வற்புறுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளையில் வந்தாறுமூலையில் தமிழருக்குச் சொந்தமான பசுமாடுகள் இராணுவத்தினரால் சுடப்பட்டு இறைச்சிக்காக முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.இலுப்பையடிச் சேனைப்பகுதியிலும் வளர்ப்பு ஆடுகள் இராணுவத்தினரால் இறைச்சிக்காக கொண்டுசெல்லப் டுகின்றன.

# மரண அறிவித்தல்

## சின்னையா செல்லத்துரை

சின்னையா செல்லத்துரை நேற்றுக் காலமானுர். அன்னுர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலம் சென்ற சின்னையா-லெட்சுமிப்பிள்ளை தம்பதியின் அன்பு புதல்வனும், செ. செல்வநாயகம் (தெய்வா நகை மாளிகை], செ. புஸ்பம், செ. தனலட்சுமி, செ. விஜயலட்சுமி, செ. ஜெயலட்சுமி, செ. இந்திராணி, செ. கணேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம் சென்றவர்களான சி. தம்பிப்பிள்ளை, சி. ராமலிங்கம், சி. முத்துக்குமாரு ஆகியோரின் அருமைச் சகோதரனும் செ. அருந்தவமலர், க. துரைராசா (ஆசிரியர்), சி. அரசரட்ணம் (அவுஸ்திரேலியா), அமிர்தலிங்கம் (அவுஸ்திரேலியா), Dr. ஜீவானந்தம் (லண்டன்), குணராசா (அவுஸ்திரேலியா), பத்மநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் (1-06-1991) இன்று சனிக்கிழமை அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 3-30 மணியளவில் தனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- மு. கனகரட்ணம்

9, அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4791)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81